# விபஸ்ஸனா செய்தி மடல்

மலர்-2, இதழ்-3, டிசம்பர் 2008 | ஒரு மடலின் விலை-ரூ 2.50 | விபஸ்ஸனா தியான மையம்
தமிழ் மாதப் பத்திரிகை | ஆண்டு சந்தா-ரூ 30 | தம்ம சேது, சென்னை, தமிழ்நாடு

[விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை]

## தம்ம வாக்கு

**மாவோச ப$^2$ருஸங் கஞ்சி, உத்தா படிவதெ$^3$ய்யு தங்;**
**து$^3$க்கா$^2$ ஹி ஸாரம்பகதா$^2$, படித$^3$ண்டா$^3$ பு$^2$ஸெய்யு தங்.**

எவரிடமும் கடுங்சொற்களைப் பயன்படுத்தாதீர்கள். அவ்வாறு கடுங்சொற்களுடன் பேசினால் மற்றவர்களும் உங்களிடம் அப்படியே பேசுவார்கள். கோபமும் விவாதமும் உள்ள சொற்கள் துன்பமே. அதன் விளைவாக உங்களுக்கு தண்டனைதான் கிடைக்கும்.

தம்மபதம் – 133(தண்டவக்கோ)

**<u>முன்னுரை</u>**: புத்தர் மற்றும் அவரது போதனைப் பற்றி நம் நாட்டில் மிக-பல தவறான கருத்துக்கள் பரவியுள்ளன. அவைகளைத் தெளிவுபடுத்தி (நீக்கி) உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவது மிக அத்யாவசியமானது. குறிப்பாக, இது விபஸ்ஸனா சாதகர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. இல்லையெனில், அவர் உண்மை நிகழ்வுகளைப் புரிந்துகொள்ளாமல் குழப்பத்திலேயே மூழ்கி இருந்துவிடுவார். இந்த மாதத்திலிருந்து விபஸ்ஸனா செய்தி மடலில் வெளிவரும் புத்தரின் வாழ்வு நிகழ்வுகளின் மூலம் அனைத்துத் தவறான கருத்துக்களிலிருந்து விடுதலை கிடைக்காவிட்டாலும் சிலவற்றிலிருந்தாவது விடுதலை கிடைக்கும்.

# சமணர் கோளத்தை ஏற்றுக்கொண்டார்

**திரு. சத்திய நாராயண கோயங்கா**



இளவரசர் அநோமா நதியை கடந்த பின், தனது அரச ஆடை ஆபரண அலங்காரங்களை அவிழ்த்து, தனது தேரோட்டியான சண்ணனிடம் கொடுத்து சமணக் கோளத்தை ஏற்றுக்கொண்டார். இங்கு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது என்னவெனில் அவர் வைதீக பரம்பரையைச் சார்ந்த துறவியாக ஆகவில்லை. தாடி, மீசை மற்றும் தலை

முடியை வளர்த்துக்கொள்வதற்குப் பதிலாக அவற்றை அறுத்துவிட்டு அவர் சமணர் கோளத்தை ஏற்றார். சமணப் பரம்பரையை சார்ந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததனால் அவர் இவ்வாறு செய்தது உகந்ததே. அரசவையில் அநேக ஜோதிடாசார்ய பிராமணர்களின் தலைமை இருந்தது. அரச புரோகிதரான அஸித தேவலரும் ஒரு பிராமணர் தான். இவையெல்லாம் இருந்த போதிலும், அரச பரம்பரை ஸமண பாரம்பரியமாக இருந்தது. சமணபரம்பரையின் சமணர்கள், பிக்ஷுக்கள், முனிவர்கள் மற்றும் சன்னியாசிகளுக்கு ஜோதிடம் மற்றும் மதச்சடங்குகள்(கர்மகாண்டம்) செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டிருந்தது. இதனால் ஜோதிடம் போன்ற வேலைகளை பிராமணர்கள் மட்டுமே செய்து கொண்டிருந்தனர். அரசாங்கத்திலும், குடும்பத்திலும் பிராமண ஜோதிடர்களின் தலைமைக்கான முக்கிய காரணம் இதுதான். இந்த மரபு அக்காலத்திலிருந்து இக்காலம் வரை வழிவழியாக வந்து கொண்டிருக்கின்றது

இந்த அரசவை பிராமணர்கள் மீது சமண பாரம்பரியத்தின் தாக்கம் அதிகளவு இருந்ததும் உண்மைதான். உதாரணமாக – வயோதிக வயதை அடைந்த இராஜ புரோகிதர் அஸித தேவலர், குழந்தை சித்தார்த்தரைக் கண்டவுடன், ”இந்த குழந்தை புத்தரான பிறகு பிறப்பு-இறப்புச் சுழலிலிருந்து விடுதலைக்கான பாதையை, தம்மத்தைக்(தர்மத்தை) கற்பிக்கும்போது, நான் உயிருடன் இருக்கமாட்டேன், ஆதலால் தம்மத்தை என்னால் பெறமுடியாது” என்று நினைத்து அழுதார். இருப்பினும் இந்த குழந்தை புத்தநிலை அடையும் போது, பிறப்பு-இறப்புச் சுழலிலிருந்து விடுதலை பெறுவதற்கான பயிற்சியை கற்றுக்கொள்வதற்காக, உடனடியாக தனது மருமகன் நாலகனை சமண பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்தி அனுப்பினார். மருமகன் நாலகனும் அஸித தேவலரின் கட்டளையை உடனடியாக கடைப்பிடித்தார். பொருட்செல்வம் நிறைந்த குடும்பத்தை துறந்து சமண வாழ்க்கையை கடைப்பிடித்தார். முப்பத்தைந்து ஆண்டுகள் காத்திருந்த பிறகு ஸம்மா-ஸம்புத்தரான இளவரசர் சித்தார்த்தரிடமிருந்து விபஸ்ஸனா தியான முறையை கற்றுக்கொண்டு இமாலயப் பகுதிக்குச் சென்று தவம் செய்து, அரஹந்தர் நிலையை அடைந்தார். பிராமண அரச புரோகிதரிடமும் அவரது சீடர்களிடமும் சமணப் பாரம்பரியத்தின் தாக்கம் ஆழமாகவே இருந்தது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

அரசவை பிராமண ஜோதிடர்கள் மட்டுமல்லாமல் அந்நாளைய முக்கிய பிராமண தலைவர்களும் புத்தரின் உடலிலுள்ள முப்பத்திரண்டு உன்னத மனிதருக்குரிய அடையாள சின்னங்களுக்குப் பெருமதிப்புக் கொடுத்தனர். இளவரசர் சித்தார்த்தர் இல்லறத்தை துறந்த போது அவருடன் தவம் புரிவதற்காக சாகிய நாட்டின் ஜோதிட பிராமணர் கொண்டஞ்ஞர் மற்றும் அவருடன் கூட நான்கு பிற பிராமண ஜோதிடர்களின் புதல்வர்களும் சமண கோளத்தை ஏற்றுக்கொண்டு தவத்தில் போதிசத்துவருக்குப் பக்கபலமாக இருந்தது பிராமணர்களிடையே சமண சம்பிரதாயத்தின் ஆழ்ந்த தாக்கத்தை மேலும் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

அரச பரம்பரையில் பிராமண ஜோதிடர்களின் தாக்கம் இருந்த போதிலும் இளவரசர் சித்தார்த்தர் தவம் புரிவதற்காக சமண கோளத்தை ஏற்றுக்கொண்டார். தியானம் கற்றுக்கொள்வதற்குக் கூட அவர் எந்த பிராமண சன்னியாசியிடமும் செல்லாமல் அந்நாளைய பிரபல சமண தியான ஆசிரியர் ஆலார காலாமரிடம் செல்ல முடிவு செய்து மகத நாட்டை நோக்கி விரைந்தார்.

---

அசோக பேரரசருக்கு சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு பிறகு நாட்டில், அதர்மத்தின் ஒரு துரதிர்ஷ்டவசமான புயல் கிளம்பியது. இதனால், விபஸ்ஸனா பயிற்சி முறை மட்டுமல்லாமல் விபஸ்ஸனா என்ற பெயர் கூட மறைந்துவிட்டது. புத்தர் ஆற்றிய முக்கிய உரைகளின் பதிவுகள் கூட சிறிது சிறிதாக அழிந்தொழிந்தன. இந்த இருண்ட காலத்தில் சிலர் அறியாமையினாலும், சிலர் பகை உணர்வினாலும் பகவான் புத்தர் மற்றும் அவருடைய போதனை மீது களங்கம் ஏற்படுத்தி பல தவறான கருத்துக்களை புகுத்தினர். இவற்றுள் ஒன்று, இல்லறத்தைத் துறந்த இளவரசர் பல சன்னியாசிகள் மற்றும் தாந்திரிகர்களின் மடங்களுக்கு சென்று பயிற்சி முறைகளைக் கற்றுவந்தார். இந்த படிப்பினையின் காரணமாகதான் புத்த கயாவிலுள்ள போதி மரத்தின் கீழ் அவருக்கு போதி ஞானம் (புத்த நிலை) கிடைத்தது.

பிறப்பு-இறப்புச் சுழலிலிருந்து விடுதலை பெறுவதற்கு மட்டுமல்லாமல் அதனினும் மேலான ஸம்மா ஸம்போதி என்கின்ற சுய முயற்சியிலேயே பூரண ஞானம் அடைவதற்காக இம்மனிதர் வீட்டை துறந்தார். மேலும், துறவறத்திற்கு முன்பே இவர் ஒரு உயர்ந்த மேன்மை வாய்ந்த நிலையை அடைவார் என்ற முன்னறிவிப்பும் இருந்தது. இப்பேற்பட்ட மாமனிதர் சாதாரண சன்னியாசிகளிடமும் தாந்திரிகர்களிடமும் கற்பதென்பது இயலாததொன்றே. இருப்பினும், துரதிர்ஷ்டவசமாக பகவான் புத்தரை பற்றி இதுபோன்ற பல பொருளற்ற ஆதாரமற்ற உண்மைக்கு மாறான வதந்திகள் பரப்பப்பட்டன.

## <u>கேள்வி பதில்</u>

**கேள்வி**: நான் வீட்டில் தியானம் செய்யும்பொழுது இன்னமும் நிறைய வலி ஏற்படுகிறது. நான் என்ன செய்ய வேண்டும்?

**கோயங்காஜி**: தியானம் செய்யுங்கள். வேறு என்ன செய்யமுடியும்? நீங்கள் வெறுப்புணர்ச்சி கொள்ளும் உங்கள் பழக்கத்திலிருந்து வெளிவர இப்பொழுது உங்களிடம் ஓர் அற்புதப் பொருள் உள்ளது. நீங்கள் துன்பகரமான உணர்ச்சியை உணரும்பொழுதெல்லாம், வெறுப்புகொண்டு எதிர்வினை புரிவது மனதின் பழைய பழக்கம். அத்தகைய பழக்கங்களிலிருந்து விடுதலைப் பெற உங்களுக்கு விபஸ்ஸனா உதவுகிறது.
துன்பகரமான உணர்ச்சிகளை எதிர்கொண்டு அவற்றின் மீது வெறுப்பை எற்படுத்தும் பழைய பழக்கத்தை மாற்றாதவரையில், அவற்றின் மீதான வெறுப்பை அழித்தொழிக்க முடியாது. எனவே, வெறுப்புணர்ச்சி கொள்ளும் உங்கள் பழைய பழக்கத்திலிருந்து வெளிவர உதவும் இந்த உணர்ச்சிகளை வரவேற்று ஏற்றுக்கொள்ளுங்கள். மனதின் பழக்கப் பின்னல்களை மாற்றி அமைப்பதுதான் விபஸ்ஸனாவின் முழு நோக்கம். இன்பகரமான உணர்ச்சிகளின்பால் ஏக்கம் கொள்ளாதீர்கள்; துன்பகரமான உணர்ச்சிகளின்பால் வெறுப்புணர்ச்சி கொள்ளாதீர்கள். நீங்கள் இன்பகரமான உணர்ச்சிகளைக் கொண்டிருக்கும்பொழுது அவற்றின் மேல் பற்றுதல் கொள்ளாமல், அவற்றின்பால் எதிர்வினை புரியாமல், அவை அனிச்ச(மாறுகிறது) என்னும் புரிதலோடு அவற்றைக் கவனியுங்கள். நன்று, தற்போது உங்களுக்கு துன்பகரமான உணர்ச்சிகள் மேலெழுந்துள்ளன; அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்; விபஸ்ஸனாவின் துணையோடு செயலாற்றுங்கள்.

## <u>பாலி மொழி வகுப்பு - 2</u>

பாலி மொழி புத்தரால் பேசப்பட்ட ஒரு மொழியாகும். அவர் இம்மொழியில்தான் தம்மத்தைப் போதித்தார். ஒரு 10 நாள் விபஸ்ஸனா தியான முகாமில் கூட நாம் சில பாலி வார்த்தைகளையும் வாக்கியங்களையும் கேட்கிறோம். ஆதலால் அதன் பொருளை பிரித்து பார்ப்பதுதான் இந்த வகுப்பின் நோக்கம். இனி மாதந்தோறும் இம்மடலில் இதை நாம் பார்க்கலாம், கற்கலாம். வாருங்கள்!!!

**அஸேவனா ச பாலாநங், பண்டிதானங் ச ஸேவனா;**

**பூஜா ச பூஜநீயானங், ஏதங் மங்களமுத்தமங்.**

**அஸேவனா** – சேராமலிருப்பது, **பாலாநங்** – மூடர்களிடம் (பாலா என்றால் மூடன்), **பண்டிதானங்** – அறிவாளிகளிடம், **ஸேவனா** – சேர்க்கை, **பூஜா** – பூஜிப்பது, வணங்குவது, **பூஜநீயானங்** - வணக்கத்திற்குரியவர்களை, **ஏதங்** – இதுவே, **மங்களமுத்தமங்** – மேன்மை வாய்ந்த நன்மையாகும், மங்களமாகும்.

**மூடர்களிடம் சேராமலிருத்தல், அறிவாளிகளிடம் பழகுதல், வணக்கத்திற்குரியவர்களை வணங்குதல், இவையே மிக உத்தமமான மங்களமாகும்.**

<u>புதுச்சேரியில் பத்து நாள் விபஸ்ஸனா தியான முகாம்</u>
<u>தேதி</u>: 17/02/2009 - 28/02/2009
<u>இடம்:</u> இதயா ஆசிரமம், அரியாங் குப்பம், கல்லன் தோட்டம், புதுச்சேரி - 605601,
<u>தொடர்புகொள்க:</u> திருமதி. விஜயலட்சுமி <u>9940467453</u>, திரு. தோதியா <u>(0413)-2339275</u>, திருமதி வளர்மதி <u>(0413)-2228610</u>

# விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவனை - 2009

**விபஸ்ஸனா தியான மையம், தம்ம சேது, 533, பழந்தண்டலம் ரோடு, வழி: திருநீர்மலை, திருமுடிவாக்கம்-அஞ்சல், சென்னை - 600044, ☏: 044-24780953**

| | 10 நாள் | ஸதிபட்டான முகாம் | 20-நாள் | 3-நாள் | குழந்தைகள் முகாம் | 16-19 வயதுடைய மாணவர்களுக்கான முகாம் | தம்ம சேவை முகாம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | | | 2-23 | 29-1/2 | 24-25 | | |
| பிப்ரவரி | 4-15 | 21-1/3 | | | | | |
| மார்ச் | 4-15 | | | 19-22 | | | 26-29 |
| ஏப்ரல் | 1-12,<br>15-26 | | | 30-03 | | | |
| மே | 6-17 | | | | 2-3<br>30-31 | 21-28 | |
| ஜூன் | 3-14 | 20-28 | | 18-21 | | | |
| ஜூலை | 1-12<br>22-02 | | | | 18-19 | | |
| ஆகஸ்ட் | | | 5-26 | | 29-30 | | 3-5 |
| செப்டெம்பர் | 9-20,<br>23-04 | | | | | | |
| அக்டோபர் | 21-01 | 8-16 | | 22-25 | | | |
| நவம்பர் | 4-15<br>18-29 | | | | 1(நவம்பர்) | | |
| டிசம்பர் | 2-13<br>16-27 | | | | 27-28 | | |

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan